**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.25/2024** |
| Sessions | : | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution | : **P.W. 6** |
| | | Defence | : **D.W.** |
| | | Court | : **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | மருத்துவர் ஹரிகரன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **24.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் உதவிபேராசிரியராக பணிபுரிகிறேன். கடந்த 22.01.2017 காலை 10.15 மணியளவில் பெரம்பலூர் தலைமை மருத்துமனையில் பணியில் இருந்தபோது திரு.நல்லதம்பி, வயது 65 த.பெ கிருஷ்ணசாமி, வடகரம்பூண்டி, கடலூர் மாவட்டம், என்பவர் தனது மகனால் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவரிடம் விசாரித்தபோது தன்னை தனக்கு தெரிந்த 5 லிருந்து 6 நபர்கள் திருமாந்துறை மாம்பட்டியான் கோவிலில் காலை 9 மணியளவில் குச்சியாலும், கதிர் அறுக்கும் கத்தியாலும், தன்னை தாக்கியதாக கூறி சிகிச்சைக்காக வந்திருப்பதாக கூறினார். அவரின் உடலில் ஏற்பட்ட காயங்கள் காயம் 1 வெவ்வேறு அளவிலான சிராப்பு காயங்கள், மார்பு பகுதி, முதுகுபகுதி கை , மற்றும் கால் பகுதி வெவ்வேறு அளவுகளில் இருந்தது. காய அளவுகள் 5 X .2 செ.மீ லிருந்து 3X .2 செ.மீ வரை இருந்தது. 2. முதுகுபகுதியில் இரத்தக்கட்டு மற்றும்

வயிறு, வலது கையில் ரத்தக்கட்டு இருந்தது. முதலுதவி சிகிச்கைக்கு பின் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். பின்னர் காயம் குறித்து ஆராய்ந்த பின் அவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று சான்று அளிக்கப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ.3 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்ட நபர் வெள்ளாற்று கரையோரம் தன்னை அடித்ததாக கூறவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்த போது ஆயுதங்கள் எதையும் காட்டி விசாரிக்கவில்லை. வலதுகை மணிக்கட்டு அருகில் எலும்பு முறிவு இருந்தபோது கையெழுத்து போடமுடியுமா என்றால் அது காயத்தின் வீரியத்தை பொருத்தது. கையெத்து போடுவது மிகவும் கடினமானது தான். காயம்பட்ட நபருக்கு தலையில் காயம்இருந்ததாக குறிப்பிடவில்லை. ரத்தக்கட்டின் அளவு குறிப்பிட முடியாது. சிராய்ப்பு காயங்கள் மண் போன்ற சொரசொப்பான இடத்தில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. இரத்தக்கட்டு காயம் கடினமான சுவற்றின் மீது மோதினால் ஏற்பட வாய்ப்புள்ளது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.